# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-27/2022

Prosecution witness – PW 4

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.செல்வராஜ் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 present, A3 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

02.12.2025- 04.10 PM

முதல் விசாரணை:-

1. நான் சாயல்குடியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியாது. அ.சா.1ஐ தெரியாது. பட்டியல் சாட்சி 6 அந்தோனியை எனக்கு தெரியும்.

2. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 25.06.2021ந் தேதியன்று மதியம் 02.00 மணிக்கு மேல் 03.00 மணிக்குள் நானும், அந்தோணியும் காவல் நிலையம் சென்ற போது போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாயல்குடி காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆகும். மேற்படி பார்வை மகஜர் ஒரு செயின் பறிப்பு சம்பவம் தொடர்பாக தயார் செய்ததாக போலீசார் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

பிறழ் சாட்சி:-

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலீசார் விசாரணையின் போது மேற்படி பார்வை மகஜரை போலீசார் சம்பவ இடமான இலந்தைகுளத்தில் உள்ள

நடராஜர் செட்டியார் என்பவருக்கு சொந்தமான பனங்காட்டில் வைத்து முதல் விசாரணையில் சொன்ன தேதியில் மதியம் 02.30 மணியளவில் தயார் செய்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் புகார் தாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் மச்சான் உறவு முறை.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி